முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

1ம் பிரதிவாதிகள் தரப்பு 2 வது சாட்சி (பி.வா.சா.2)

**அ.வ.எண். 285/2013**

| | | |
|---|---|---|
| பெயர் | - | சுமிலா |
| த/பெ | - | சுதந்திரவேல் |
| கிராமம் | - | |
| தாலுகா | - | |
| தொழில் | - | |
| ஜாதி | - | |
| மதம் | - | |
| வயது | - | 29 |

1873 ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2025 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07 ம் நாள் திங்கள் கிழமை மேற்படியாரிடமிருந்து சத்திய பிரமாணத்தின் பெயரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

முதல் விசாரணை

நீதிமன்றத்தில் இருந்து பணகுடி சார்பதிவாளருக்கு சாட்சியம் அளிப்பதற்கும், ஆவணங்கள் சமர்ப்பிப்பதற்கும் அழைப்பாணை வந்தது. அழைப்பாணை வந்ததன் பேரில் பணகுடி சார்பதிவாளர் அவர்கள் எனக்கு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதற்கும், ஆவணங்கள் சமர்ப்பிப்பதற்கும் அங்கீகார கடிதம் கொடுத்துள்ளார். மேற்படி அங்கீகார கடிதம் **சா.சா.ஆ.1** ஆகும். நான் பணகுடி சார்பதிவாளர்

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.04.07 17:49:09 +0530

அலுவலகத்தில் உதவியாளராக உள்ளேன். அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை நீதிமன்றத்திற்கு கொண்டு வந்துள்ளேன். 23.08.1989 ல் செல்லக்கண்ணு நாடார் குமாரர் முத்துவேல் நாடார் உயில் எழுதி வைத்துள்ளார். மேற்படி உயில் ஆவணம் 28.08.1989 ல் பணகுடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணம் புத்தகம் 3, ஆவண எண். 32/1989 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மொத்தம் 3 பக்கங்கள் ஆகும். மேற்படி உயில் ஆவணத்தின் உண்மை நகல் **சா.சா.ஆ. 2** ஆகும். முத்துவேல் நாடாரின் இடது கைரேகை எங்கள் அலுவலக கைரேகை பதிவேட்டில் 26.08.1989 ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி கைரேகை பதிவேடு உண்மை நகல் (அசலுடன் சரி பார்க்கப்பட்டது) **சா.சா.ஆ.3** ஆகும். சா.சா.ஆ.2 உயில் ஆவணமானது எங்கள் அலுவலகத்தில் 1989 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26ம் நாள் பகல் 11 - 12 மணிகளுக்கு இடையே பணகுடி சார்பதிவாளர் அலுவலகத்தல் கட்டணம் ரூ. 200/- முத்து வேல் நாடார் செலுத்தியதாக உள்ளது. இன்னாரென்று நிரூபித்தவர் நவமணி தங்கராஜ், த/பெ. தங்கையா நாடார். லெப்பை குடியிருப்பு, அருணாச்சல நாடார், த/பெ. பெரிய நாடார்.

<u>குறுக்கு விசாரணை</u>

1) சா.சா.ஆ.2 உயில் பணகுடி சார்பதிவாளரால் எப்போது பதிவு செய்யப்பட்டது என்றால் 28.08.1989 ல் பதிவு செய்யப்பட்டதாக குறிப்பு உள்ளது என்றால் சரி தான். என்று சார்பதிவாளர் கையொப்பம் செய்கிறாரோ அன்று தான் பதிவு செய்யப்பட்டதாக கருதப்படும் என்றால் சரி தான். சா.சா.ஆ.2 எழுதப்பட்டதாக சொல்லக் கூடிய

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.04.07 17:49:15 +0530

காலத்தில் நீங்கள் பணகுடி சார்பதிவாளர் அலுவலகத்தில் வேலை பார்க்கவில்லை என்றால் சரி தான். சா.சா.ஆ.2 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள ஷரத்துக்கள் எங்கள் அலுவலக அதிகாரிகளால் எழுதப்பட்டது என்றால் சரி தான்.

2) முத்துவேல் நாடார் யாருக்கு எழுதப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் கன்னியாகுமரி மாவட்டம், சந்தையடி விளை செல்லப்பா நாடார் மகள் செல்லத்தங்கம்மாளை திருமணம் செய்து எங்களுக்குள் பிறந்த வாரிசுகள் 16 வயது வசந்தி, 14 வயது சாந்தி, 11 வயது செல்வராஜ் இவர்கள் இருந்து வருகிறார்கள் என்றும் உயில் ஆவணம் எழுதி வைத்ததாக கூறும் நபர் அவரது ஆயுளுக்கு பிறகு அவரது மனைவி அவரது 2ம் தார மனைவி செல்லத்தங்கம்மாளுக்கும் மற்றும் 3 மக்களுக்கும் என எழுதி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரி தான்.

3) சா.சா.ஆ. 3 ஆவணத்தில் முத்துவேல் நாடாரின் இடது கை பெருவிரல் பதிவு செய்யப்பட்டதாக ஆவணத்தில் பதிவு இல்லை என்றால் சரி தான். சா.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ள இடது கை பெருவிரல் பதிவு செய்யப்பட்டதாக சொல்லப்படும் பதிவு எண். 26.08.1989 ல் பதிவு செய்யப்பட்டதாக உள்ளது. சார்பதிவாளர் சா.சா.ஆ.3 ஆவணத்தில் 26.08.1989 ல் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரி தான். சா.சா.ஆ.2 உயில் ஆவணத்தில் 28.08.1989 ல் சார்பதிவாளர் பதிவு செய்துள்ளதாக கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரி தான்.

JAYANDRAN ANNSRAJA Digitally signed by JAYANDRAN ANNSRAJA Date: 2025.04.07 17:49:20 +0530

4) பொதுவாக சார்பதிவாளருக்கு ஆவணம் பற்றிய விவரங்களோ அல்லது ஆவணத்தை தாக்கல் செய்திருக்கிற நபர் மீது சந்தேகம் வந்தால் அது பற்றி அவர் விசாரணை செய்வதற்கு அதிகாரம் உள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. சார்பதிவாளருக்கு ஆள் மாறாட்டம் செய்து ஆவணம் தாக்கல் செய்துள்ளதாக கருதியதால் தான் குறிப்பிட்ட தினத்தில் அவர் ஆவணத்தை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல.

5) சா.சா.ஆ. 2 மற்றும் சா.சா.ஆ.3 ஆவணங்களில் உள்ள சார்பதிவாளர் கையொப்பம் வேறு வேறாக உள்ளது என்றால் சரி தான். அசல் உயில் ஆவணத்தோடு ஒப்பிட்டு எழுதப்பட்டதாக சா.சா.ஆ.2 ல் சொல்லப்படவில்லை என்றால் சரி தான். சா.சா.ஆ.2 ஆவணத்தை பதிவு செய்த சார்பதிவாளரை விசாரித்தால் தான் உண்மை நிலவரம் தெரிய வரும் என்று சொன்னால் சரி தான். தற்போது உள்ள சார் பதிவாளர் வந்து ஆஜராகி வாய்மொழி சாட்சியம் அளித்திருந்தால் தெளிவாக சொல்ல முடியும் என்றால் சரி தான்.

6) முத்துவேல் நாடார் என்பவர் அவர் தான் என்பதை நிரூபிப்பதற்கு எங்களிடம் ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரி தான். முத்துவேல் நாடார் மனைவி, மக்கள் பற்றி விவரம் அறிய வேறு ஆவணங்கள் இல்லை என்றால் சரி தான்.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.04.07 17:49:25 +0530

சா.சா.ஆ.2 ஆவணத்தின் சான்றிட்ட நகலை உரிய நபர்கள் கேட்டால் அதை கொடுப்பதற்கு சார்பதிவாளருக்கு அதிகாரம் உண்டு என்றால் சரி தான்.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.04.07 17:49:30 +0530